# <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>

முன்னிலை : **திரு. G. யுவராஜ், M.A., M.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2022–ஆம் ஆண்டு, ஜுன் திங்கள், 20–ஆம் நாள், திங்கட்கிழமை

**<u>I.A. No. 2 of 2021 in O.S. No. 213 of 2021</u>**

**<u>(CNR No. TNSA-1300-0261-2021)</u>**

1. தங்கவேல்
2. கோமதி .. மனுதாரர்கள் / வாதிகள்

எதிராக

1. மாரியாயி
2. குப்புசாமி
3. குமார் .. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது கடந்த 15.06.2022–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. ராமசாமி அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 வரை எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>உத்தரவுரை</u>

தாவா சொத்துக்களை மனுதாரர்கள் / வாதிகள் அமைதியான முறையில் அனுபவித்து வருவதற்கு எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் ஆக்கிரமிப்போ அல்லது அனுபவத்திற்கு இடையூறு செய்யக்கூடாதென இடைக்கால உறுத்துக்

கட்டளைப் பரிகாரம் கோரி மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

2. **மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :** 1-ம் மனுதாரர், 2-ம் மனுதாரரின் தகப்பனார் ஆவார். 1-ம் மனுதாரர் கடந்த 19.11.1992 அன்று சர்வே எண்கள் 45/1A மற்றும் 52/5B-ல் உள்ள சொத்துக்களை ராமசாமி கவுண்டர் மகன் சுப்ரமணியம் மற்றும் அவரது குடும்பத்தினரிடமிருந்து பதிவு செய்யப்பட்ட கிரயப்பத்திரத்தின் மூலம் கிரயம் பெற்றுள்ளார். 1-ம் மனுதாரரின் தகப்பனார் செல்லப்ப கவுண்டர், 1-ம் மனுதாரருக்கு கடந்த 21.04.2004 அன்று ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள சொத்துக்களில் சர்வே எண் 45/1B மற்றும் 45/3-ல் உள்ள சொத்துக்கள் மட்டுமே தாவாவில் 1-வது அயிட்ட சொத்துக்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா 2-வது அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து 1-ம் மனுதாரர் கடந்த 02.02.2021 அன்று அவரது மகளான 2-ம் மனுதாரர் பெயருக்கு ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். அதன் பின்னிட்டு மனுதாரர்கள் இருவரும் தாவா சொத்துக்களை எந்தவித இடைஞ்சல், தடங்கலின்றி அனுபவித்து வருகின்றனர். தாவா சொத்துக்களுக்கான வருவாய்த்துறை ஆவணங்கள் அனைத்தும் மனுதாரர்கள் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. சர்வே எண்கள் 45/1, 52/5-ல் உள்ள நிலங்கள் உட்பிரிவு செய்யப்படுவதற்கு முன்பு 1-ம் மனுதாரரின் தகப்பனார் செல்லப்ப கவுண்டருக்கு சொந்தமாக இருந்தது. 1-ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளின் தாயார் ஆவார். அவர்களது நிலம் தாவா சொத்தின் வடபுறத்தில் அமைந்துள்ளது. பிரதிவாதிகளின் நிலம் உலிபுரம் கிராம எல்லைக்குள் அமைந்துள்ளது. தாவா சொத்துக்கள் தம்மம்பட்டி கிராம எல்லைக்குள் அமைந்துள்ளது. தாவா சொத்துக்கும் பிரதிவாதிகளின் நிலத்திற்கும் இடையில் பழனி கவுண்டர் என்பவருக்கு சொந்தமான சர்வே எண் 52/5A-ல் உள்ள நிலம்

அமைந்துள்ளது. தாவா மாதிரி வரைபடத்தில் உள்ளவாறு சர்வே எண் 45/1C நிலத்தின் தென்புறம் கிழமேலாக ஒரு பாதை செல்கிறது. மேற்படி சர்வே எண் 45/1C–ல் உள்ள நிலம் 1–ம் மனுதாரரின் தகப்பனாருக்கும், அவரது சகோதரர் சுப்ரமணியம் என்பவருக்கும் சொந்தமான பட்டா நிலமாகும். எதிர்மனுதாரர்கள் அவர்களது நிலங்களுக்கு செல்வதற்கு வண்டிப்பாதை அமைக்க வேண்டி சர்வே எண் 45/1B மற்றும் 52/5C–ல் நிலத்தின் ஒரு பகுதியை கேட்டார்கள். அதற்கு மனுதாரர்கள் மறுத்துவிடவே, மனு சொத்துக்களை மனுதாரர்கள் அனுபவித்து வருவதற்கு பிரதிவாதிகள் தொடர்ந்து இடையூறு செய்து வருகிறார்கள். மேலும் தம்மம்பட்டி காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர்கள் பொய்யான புகாரை கொடுத்துள்ளார்கள். போலீசார் மூலம் எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தில் வண்டிப்பாதை அமைக்க முயற்சித்தார்கள். எதிர்மனுதாரர்களுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை. அவர்கள் தாவா சொத்துக்கு 3–ம் நபர்கள் ஆவார்கள். எதிர்மனுதாரர்கள் அவர்களது நிலங்களுக்கு செல்வதற்கு வெவ்வேறு பாதை தனித்தனியாக உள்ளது. இருப்பினும் அவர்கள் மனுதாரர்களுக்கு சொந்தமான நிலத்தில் வண்டிப்பாதை அமைக்க முயற்சித்தார்கள். அவ்வகையில் கடந்த 28.10.2021 அன்று எதிர்மனுதாரர்கள் தாவா சொத்துக்களில் அத்துமீறி நுழைந்து அதிலுள்ள மரவள்ளி கிழங்கு பயிர்களை சேதப்படுத்தினார்கள். அதை மனுதாரர்கள் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் தடுத்துவிட்டனர். அதன் பின்னர் பல பஞ்சாயத்து செய்தும் எதிர்மனுதாரர்கள் எவ்வித சமாதானத்திற்கும் ஒத்துவரவில்லை. எனவே மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

3. <u>1–ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2, 3 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u> மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவைகள். அவைகளை மனுதாரர்களே சட்டப்படி நிரூபிக்க வேண்டும்.

சர்வே எண் 529/3–ல் உள்ள ஏக்கர் 2.72 செண்ட் நிலம் செல்லமுத்து மற்றும் அவரது மனைவி பாப்பாயி மற்றும் 1–ம் மனுதாரருக்கு சொந்தமானதாகும். மேற்படி செல்லமுத்துவின் பெற்றோர்கள், அவரது மனைவி மற்றும் 1–ம் மனுதாரர் மேற்படி சொத்தினை கடந்த 31.08.1984 அன்று ஒரு முகமது இஸ்மாயில் என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளனர். அக்கிரயப்பத்திரத்திலேயே கிரய சொத்துக்கு செல்வதற்கு வண்டிப்பாதையாக, ***"இதன் மாமூல் வழி பாதை பாத்தியமாகிய கொக்காங்காடு ரோடு தென்வடலாக போகும் பொது ரோட்டில் இருந்து சர்வே எண் 52/5 உள்ள 1 லக்கமிட்டவரின் வேறு நிலம் வழியாக தற்போதைய கிரய நிலத்திற்கு போக வர தட நடை வண்டி வாகனாதிகள் போக வர பொது வழி பாதை பாத்தியமும்"*** என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி கிரயத்தின்போதே மேற்படி வண்டிப்பாதையை பயன்படுத்தும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அதை மனுதாரர்கள் தங்கள் வழக்கில் கூறாமல் மறைத்துள்ளனர். அதன் பின்னிட்டு மேற்படி வண்டிப்பாதை இருப்பதை குறித்து தனியே ஒரு ஆவணம் எழுதிக்கொள்ள வேண்டும் என்பதற்காக வேண்டி 1–ம் வாதியின் தகப்பனார், சகோதரர் பழனியப்பன் மற்றும் சுப்ரமணியம் ஆகியோர் மேற்படி முகமது இஸ்மாயில் என்பவருடன் சேர்ந்து கடந்த 04.09.1984 அன்று ஒரு தடபாத்திய ஒப்பந்தப்பத்திரத்தை எழுதி பதிவு செய்து கொண்டுள்ளனர். அந்த ஆவணத்தில் மனுதாரர்களுக்கு சொந்தமான சொத்தில் செல்லும் வண்டித்தடமானது அமைந்துள்ளதை தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி தட பாத்திய ஒப்பந்தப்பத்திரம் குறித்தும் வாதிகள் அவர்களது வழக்கில் கூறாமல் மறைத்துள்ளனர். அதன் பின்னிட்டு 1–ம் எதிர்மனுதாரர் மேற்படி சர்வே எண் 529/3–ல் ஏக்கர் 2.72 செண்ட் நிலத்தை முகமது இஸ்மாயிலிடமிருந்து கடந்த 05.05.2005 அன்று கிரயம் பெற்றுள்ளார். அக்கிரயப்பத்திரத்திலும் வண்டித்தடம் அமைந்துள்ளது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கிரயத்திற்குப் பின்னிட்டு எதிர்மனுதாரர்களும் அவர்களது குடும்பத்தினரும் சர்வே எண் 529/3 நிலத்திற்கு செல்வதற்கு 05.05.2005 தேதியிட்ட கிரயப்பத்திரத்திலும், 04.09.1984

தேதியிட்ட கிரயப்பத்திரத்திலும் சொல்லப்பட்டுள்ள வண்டித்தடத்தின் மூலம் சென்று பயன்படுத்தி வருகிறார்கள். 1–ம் எதிர்மனுதாரரின் கிரயதாரருக்கு உள்ள உரிமையின்படியும், அதன் பின்னர் 1–ம் எதிர்மனுதாரருக்கு உள்ள உரிமையின்படியும் சர்வே எண்கள் 45/1B, 45/3 மற்றும் 52/5C–ல் உள்ள நிலங்களின் வழியே செல்லும் வண்டித்தடத்தின் மூலம் எதிர்மனுதாரர்கள் அவர்களுக்கு சொந்தமான சர்வே எண் 529/3 நிலத்திற்கு செல்ல உரிமையுள்ளது. சர்வே எண் 52/5C–க்கான புல வரைபடத்திலும் வண்டித்தடம் செல்வது குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வண்டித்தடமானது 1–ம் எதிர்மனுதாரரின் கிரயதாரர்கள் மற்றும் 1–ம் மனுதாரர் மற்றும் அவரது முன்னோர்களால் 13 அடி அகலத்தில் அமைக்கப்பட்டது. மேற்படி விவரங்கள் அனைத்தையும் மறைத்துவிட்டு உண்மைக்கு புறம்பாக எதிர்மனுதாரர்கள் புதிய வண்டித்தடம் அமைக்க முயற்சித்ததாக கூறி மனுதாரர்கள் / வாதிகள் இவ்வழக்கையும், மனுவையும் தாக்கல் செய்துள்ளனர். ஏற்கனவே வண்டித்தடம் பயன்பாட்டில் இருந்து வருவதால் புதிய வண்டித்தடம் எதுவும் அமைக்க வேண்டிய அவசியமில்லை. கடந்த 28.10.2014 அன்று 1–ம் மனுதாரரும் அவரது தகப்பனாரும் தடபாத்திய பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள வண்டித்தடத்தை எதிர்மனுதாரர்கள் பயன்படுத்தக்கூடாது என்று கூறி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார்கள். அந்த அறிவிப்புக்கு கடந்த 01.11.2014 அன்றே 1–ம் எதிர்மனுதாரர் பதிலறிவிப்பு அனுப்பியிருந்தார். மேற்படி 1–ம் மனுதாரர் மற்றும் அவரது தகப்பனார் அனுப்பியிருந்த மேற்படி அறிவிப்பிலேயே மேற்படி வண்டித்தடம் இருப்பதை குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்டது. 1–ம் பிரதிவாதி பதிலறிவிப்பு அனுப்பிய பின்னர் மனுதாரர்கள் இவ்வழக்கை தாக்கல் செய்யும் நாள் வரை அமைதியாக இருந்தனர். எனவே அந்த சமயத்தில் எதிர்மனுதாரர்கள் எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. இம்மனுவில் மனுதாரர்கள் இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் பெற்று, தாவா வண்டித்தடத்தை அழித்து அதை அவர்களுக்கு சொந்தமான சர்வே எண்கள் 45/1B, 45/3 மற்றும்

52/5C நிலங்களுடன் இணைத்துக்கொள்ள முயற்சித்து வருகின்றார்கள். அவ்வாறு செய்தால் எதிர்மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும். எதிர்மனுதாரர்கள் அவர்களது நிலங்களுக்கு வண்டி வாகனங்களுடன் செல்ல இயலாது. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

4. ***இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், மனுதார்கள் மனுவில் கோரியவாறான இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் மனுதாரர்களுக்குக் கிடைக்கத்தக்கதா இல்லையா என்பதும், மனுவின் தரப்பினர்கள் அடையத்தக்க வேறு பரிகாரங்கள் என்ன என்பதும் ஆகும்?***

5. இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் எதுவும் முன்னிடப்படவில்லை. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் 14 வரையான ஆவணங்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் 21 வரையான ஆவணங்களும், நீ.ம.சா.ஆ.1 முதல் 4 வரையான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. மனுதாரர்கள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், மனு சொத்துக்கள் 1, 2 மனுதாரர்களுக்கு ம.சா.ஆ.1, 2, 3 ஆவணங்களின்படி பாத்தியப்பட்டு, அவர்களது பெயரில் வருவாய்த்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, மனு சொத்துக்களை மனுதாரர்கள் இருவரும் அனுபவித்து வருவதற்கு ஆதரவாக ம.சா.ஆ.4 முதல் 7 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மனு சொத்துக்கள் ஆதியில் 1–ம் மனுதாரரின் தகப்பனார் செல்லப்ப கவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்பதற்கு ஆதாரமாக ம.சா.ஆ.7 வரிசையில் உள்ள 'அ' பதிவேடும், ம.சா.ஆ.11 பட்டா பாஸ் புத்தகமும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மனு சொத்துக்களில் எதிமனுதாரர்களுக்கு எந்தவித உரிமையோ அனுபவமோ இல்லாத நிலையில், புதியதாக வண்டித்தடம் அமைக்க வேண்டி மனுதாரர்களிடம் இடம் ஒதுக்கும்படி

கேட்டதற்கு மனுதாரர்கள் மறுத்துவிடவே, மனு சொத்துக்களை மனுதாரர்கள் அனுபவித்து வருவதற்கு எதிர்மனுதாரர்கள் தொடர் இடையூறு செய்து வந்த காரணத்தால் மனுதார்கள் மேற்படி வழக்கையும், இம்மனுவையும் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் எனவே மனு சொத்து, மனு தாக்கல் செய்த தேதியில் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டு, மனுதாரர்களின் அனுபவத்தில் இருந்து வந்துள்ளதை நிரூபிக்கப்பட்டுள்ளதால் இம்மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

7. மனுதாரர்கள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மேலும், 1-ம் எதிர்மனுதாரரின் கிரயதாரரான முகமது இஸ்மாயில் என்பவர் எ.ம.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் உலிபுரம் கிராம சர்வே எண் 529/3-ல் உள்ள சொத்தை கடந்த 31.08.1984 அன்று கிரயம் பெற்றபோது, அக்கிரயப் பத்திரத்திலேயே அக்கிரய சொத்துக்கு செல்லும் பாதை குறித்து எழுதப்பட்டுள்ள நிலையில், பின்னிட்டு 04.09.1984 அன்று எ.ம.சா.ஆ.2 ஆவணமான பாதை ஒப்பந்தப்பத்திரத்தை எழுதிக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், எனவே எ.ம.சா.ஆ.2 ஆவணமே சந்தேகத்திற்கு இடமாக உள்ளது என்றும், அந்த ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு கொடுத்தும் தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே 1-ம் எதிர்மனுதாரர் எ.ம.சா.ஆ.3 ஆவணம் மூலம் கிரயம் பெற்ற சொத்துக்கு மனுதாரர்களுக்கு சொந்தமான நிலத்தின் வழியே பாதை வசதி உள்ளதாக எ.ம.சா.ஆ.3 ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது சட்டத்திற்கு புறம்பானது என்றும் எனவே மனுதாரர்களுக்கு சொந்தமான நிலத்தில் எதிர்மனுதாரர்களுக்கு பாதை வசதி எதுவும் இல்லை என்பதால் மனுதாரர்களின் கட்சி நிராகரிக்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

8. எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், உலிபுரம் கிராம சர்வே எண் 529/3-ல் உள்ள ஏக்கர் 2.72 செண்ட் சொத்தினை கடந்த 31.08.1984 அன்று ஒரு முகமது இஸ்மாயில் என்பவருக்கு

1–ம் மனுதாரரின் தகப்பனார், தாயார் மற்றும் 1–ம் மனுதாரர் கூட்டாக எ.ம.சா.ஆ.1 ஆவணம் மூலம் கிரயம் செய்து கொடுத்துள்ளனர் என்றும், அக்கிரயப் பத்திரத்திலேயே கிரய சொத்துக்கு செல்லும் பாதை என கொக்காங்காடு ரோடு, தென்வடலாக போகும் பொது ரோட்டிலிருந்து சர்வே எண் 52/5–ல் உள்ள 1–ம் மனுதாரரின் தகப்பனாரின் வேறு நிலம் வழியாக கிரய நிலத்துக்குப் போக வர தட நடை வண்டி வாகனாதிகள் போக வர பொது வழி பாத்தியம் என குறிப்பாக குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றும், அதன் பின்னிட்டு மேற்படி பொது வழியில் 1–ம் மனுதாரரின் தகப்பனாரின் சகோதரர்களான பழனியப்பன் மற்றும் சுப்ரமணியம் என்பவர்களுக்கும் உரிமையிருந்த காரணத்தால், 1–ம் மனுதாரரின் தகப்பனார் மற்றும் 1–ம் மனுதாரரின் தகப்பனாரின் சகோதரர்களான பழனியப்பன் மற்றும் சுப்ரமணியம் என்பர்களுடன் மேற்படி முகமது இஸ்மாயில் கடந்த 04.09.1984 அன்று ஒரு பாதை ஒப்பந்தப்பத்திரத்தை எழுதி அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த ஆவணத்தின் அசல் எதிர்மனுதாரர்கள் வசம் இல்லாததால் அதன் சான்று நகல் எ.ம.சா.ஆ.2–ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், எ.ம.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் கிரயம் பெற்ற சொத்தையும், அதில் சொல்லப்பட்டுள்ள தடபாத்தியத்தையும், எ.ம.சா.ஆ.2 தடபாத்திய ஒப்பந்தப் பத்திரத்தில் உள்ள தடபாத்திய உரிமையையும் சேர்த்து மேற்படி முகமது இஸ்மாயில் என்பவர் கடந்த 05.05.2005 அன்று எ.ம.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் 1–ம் எதிர்மனுதாரருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றும், அது முதல் இவ்வழக்கு தாக்கல் செய்யும் நாள் வரை எதிர்மனுதாரர்கள் எ.ம.சா.ஆ.3–ல் கண்ட சொத்தை அனுபவித்து வருகின்றனர் என்றும், எ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையான ஆவணங்களில் உள்ள பாதையை எ.ம.சா.ஆ.3–ல் உள்ள கிரய சொத்துக்கு செல்வதற்கு எதிர்மனுதாரர்கள் பயன்படுத்தி வந்த நிலையில், அப்பாதையை எதிர்மனுதாரர்கள் பயன்படுத்தக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில், உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கூறி இவ்வழக்கையும், மனுவையும் தாக்கல் செய்த மனுதாரர்கள், இடைக்கால உறுத்துக்கட்டளைப்

.. 9 ...

பரிகாரம் பெற்ற பின்னிட்டு, ஏற்கனவே பயன்பாட்டில் இருந்த பாதையை அழித்து சமன் செய்துவிட்டு புதியதாக கல்கம்பம் வேலி அமைத்துவிட்டார்கள் என்றும், பாதை பயன்பாட்டில் இருப்பதை மனுதாரர்கள் அழித்துவிட்டு அதில் நெல் பயிர் நட்டுவிட்டார்கள் என்றும், இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் பாதை இருந்ததற்கு ஆதாரமாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.8, 9 ஆவணங்களில் உள்ள புகைபடங்கள், குறுந்தகடு மற்றும் புகைபடம் எடுத்ததற்கான ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதன் பின்னிட்டு இடைக்கால உறுத்துக்கட்டளைப் பெற்ற மனுதாரர்கள் பாதை இருந்த இடத்தை அழிக்க வேண்டி புதியதாக கல்கம்பம் நடுவதற்காக குழி வெட்டியபோது எடுத்த புகைபடங்கள் அதிற்கான ரசீதுகள் குறுந்தகடு உள்ளிட்டவைகள் எ.ம.சா.ஆ.11 முதல் 14 வரையாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அதன் பின்னிட்டு 1–ம் எதிர்மனுதாரர் காவல் நிலையத்திற்கும், முதலமைச்சருக்கும் மனுதாரர்களின் அராஜக செயலைக் குறித்து புகார் அனுப்பியுள்ளதற்கு ஆதாரமாக எ.ம.சா.ஆ.15 முதல் 21 வரிசையில் உள்ள ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இம்மனுவில் வழக்கறிஞர் ஆணையரை நியமணம் செய்ய வேண்டி எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு வழக்கறிஞர் ஆணையர் மனு சொத்துக்களை பார்வையிட்ட பிறகு தாக்கல் செய்துள்ள அறிக்கையிலும், தாவா பாதையில் புதியதாக மனுதாரர்கள் நெல் பயிர் செய்துள்ளதும், புதியதாக கல் கம்பம் நடப்பட்டுள்ளது குறித்தும் ஆணையர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றும், அதற்கான புகைப்படங்களையும் ஆணையர் தாக்கல் செய்துள்ளார் என்றும், எ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையான ஆவணங்களில் உள்ள பாதை பூமியில் இருப்பதைக் குறித்து எ.ம.சா.ஆ.4, 5 புல வரைபடங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதேபோல் நில அளவையரின் கூட்டு வரைபடமான நீ.ம.சா.ஆ.3 வரைபடத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மனு சொத்துக்களில் உள்ள பாதையை தவிர, மனுதாரர்கள் அவர்களுக்கு சொந்தமான நிலங்களை மனுதாரர்கள் அனுபவித்து வருவதற்கு எதிர்மனுதாரர்கள் எப்போதும்

எந்தவித ஆட்சேபனையும் தெரிவித்ததில்லை என்றும், எனவே தாவா பாதையை தவிர்த்து மனுதாரர்கள் கோரியவாறு இதர சொத்துக்களுக்கு பரிகாரம் வழங்கியும், தாவா பாதையைப் பொறுத்து மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுமாறு வாதிட்டார்.

9. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

10. இவ்வழக்கிலும், இம்மனுவிலும் உள்ள சொத்து விவரத்தில் இரண்டு அயிட்ட சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டு அயிட்ட சொத்துக்களும் 1–ம் மனுதாரருக்கு ம.சா.ஆ.1–ஆன 19.11.1992 தேதியிட்ட கிரயப்பத்திரத்தின் அடிப்படையிலும், 21.04.2004 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையிலும் பாத்தியப்பட்டுள்ளது தெரியவருகின்றது. அதன் பின்னிட்டு 1–ம் மனுதாரர், மனு 2–வது அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து அவரது மகளான 2–ம் மனுதாரர் பெயருக்கு கடந்த 02.02.2021 அன்று ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளது ம.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் தெரியவருகின்றது.

11. மனு 1–வது அயிட்ட சொத்துக்களுக்கான பட்டா 1–ம் மனுதாரர் பெயரில் இருந்து வருவதற்கு ஆதாரமாக ம.சா.ஆ.4 கணிணி பட்டாவும், மனு 2–வது அயிட்ட சொத்துக்கள் 2–ம் மனுதாரர் பெயரில் இருந்து வருவதற்கு ஆதரமாக ம.சா.ஆ.5 கணிணி பட்டாவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனு 2–வது அயிட்ட சொத்துக்கள் 2–ம் மனுதாரரின் அனுபவத்தில் இருந்து வருவதற்கு ஆதாரமாக ம.சா.ஆ.6 அடங்கல் பதிவேடும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.2 ஆவணத்திலுள்ள சொத்துக்கள் 1–ம் மனுதாரரின் தகப்பனார் செல்லப்ப கவுண்டர் என்பவருக்கு சொந்தமாக இருந்துள்ளதற்கு ஆதாரமாக ம.சா.ஆ.7 வரிசையிலுள்ள 'அ' பதிவேடு மற்றும் ம.சா.ஆ.11 பட்டா பாஸ் புத்தகம், ம.சா.ஆ.12, 13 வரிசையிலுள்ள யூ.டி.ஆர் பட்டாக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

12. மனு சொத்துக்கள் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டு அவர்களது அனுபவத்தில் இருந்து வருவது குறித்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்தவித மறுப்பும் இல்லை. அதே நேரத்தில் 1–ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட உலிபுரம் கிராம சர்வே எண் 529/3–ல் உள்ள சொத்தினை, 1–ம் எதிர்மனுதாருக்கு கிரயம் செய்த கிரயதாரரான முகமது இஸ்மாயில் என்பவருக்கு இம்மனுவின் 1–ம் மனுதாரும் அவரது தகப்பனார் செல்லப்ப கவுண்டர் மற்றும் தாயார் பாப்பாயி என்பவர்களும் சேர்ந்து கடந்த 31.08.1984 அன்று பதிவு செய்யப்பட்ட கிரயப்பத்திரத்தின் மூலம் கிரயம் செய்து கொடுத்துள்ளது எ.ம.சா.ஆ.1 ஆவணம் மூலம் தெரியவருகின்றது. எ.ம.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள கிரய சொத்துக்கு செல்லும் பாதையாக, எ.ம.சா.ஆ.1 ஆவணத்தின் பக்கம் 9–ல், ***கொக்காங்காடு ரோடு தென்வடலாக போகும் பாதை ரோட்டிலிருந்து சர்வே எண் 52/5–ல் உள்ள 1 லக்கமிட்டவரின் வேறு நிலம் வழியாக தற்போதைய கிரய நிலத்திற்கு போக வர தட நடை வண்டி வாகனாதிகள் போக வர வழி பாத்தியமும் திட்டு திடல் வழி பாத்தியமும் பூராவும்*** என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது தெரியவருகின்றது.

13. எ.ம.சா.ஆ.1 கிரயத்திற்குப் பின்னிட்டு, 1–ம் மனுதாரரின் தகப்பனாரான செல்லப்ப கவுண்டரும், சகோதரர்களான பழனியப்பன் மற்றும் சுப்பரமணியம் என்பவர்களும் மேற்படி முகமது இஸ்மாயில் என்பவரும் கடந்த 04.09.1984 அன்று ஒரு பாதை ஒப்பந்தப்பத்திரத்தை எழுதி அதை பதிவு செய்து கொண்டுள்ளது எ.ம.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் தெரியவருகின்றது. மனுதாரர்கள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, எ.ம.சா.ஆ.1 ஆவணத்திலேயே கிரய சொத்துக்கு செல்லும் வழி குறித்து எழுதப்பட்டுள்ளதாக காணப்படும் நிலையில், எ.ம.சா.ஆ.2 ஆவணத்தை தனியே பாதை பாத்தியத்திற்காக வேண்டி எழுதிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை என்றும், அந்த வகையில் எ.ம.சா.ஆ.2 ஆவணமே சந்தேகத்திற்கிடமான ஆவணம் என்றும் வாதிட்டார்.

14. மனுதாரர்கள் தரப்பில் முன் வைக்கப்பட்ட மேற்படி வாதம் குறித்து ஆய்வு செய்வதற்கு ஏதுவாக தம்மம்பட்டி கிராம சர்வே எண்கள் 45 மற்றும் 52–ன் கூட்டு வரைபடமான நீ.ம.சா.ஆ.3 ஆவணத்தை ஆய்வு செய்கையில், 1–ம் எதிர்மனுதாரர் எ.ம.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் கிரயம் பெற்ற சொத்துக்கு செல்லும் பாதை என எ.ம.சா.ஆ.1 முதல் 3 வரை ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள பாதையானது சர்வே எண்கள் 45/1B, 52/5C, 52/5A, 52/2 நிலங்களின் வழியாக சென்று 1–ம் எதிர்மனுதாரரின் நிலத்தை அடைவதாக உள்ளது. அவ்வாறு பாதை செல்வதும் புல வரைபடத்திலேயே தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதையும் அறிய முடிகின்றது. இவ்விடத்தில் எ.ம.சா.ஆ.1 கிரயத்திற்குப் பின்னிட்டு மேற்படி முகமது இஸ்மாயில் எ.ம.சா.ஆ.2 பாதை ஒப்பந்தப்பத்திரத்தை 1–ம் மனுதாரரின் தகப்பனார், தகப்பனாரின் சகோதரர்களுடன் எழுதிக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் என்னவாக இருக்கும் என்று ஆய்வு செய்கையில், எ.ம.சா.ஆ.1 கிரயப்பத்திரம் எழுதிக்கொடுத்த சமயத்தில் 1–ம் மனுதாரரின் தகப்பனாரான செல்லப்ப கவுண்டருக்கு 45/1B நிலமும், 52/4A நிலமும், 52/5C நிலமும் சொந்தமாக இருந்துள்ளதும், 1–ம் மனுதாரரின் தகப்பனாரின் சகோதரரான சுப்பரமணியம் என்பவருக்கு 45/1A நிலமும், 52/4C நிலமும், 52/5B நிலமும் சொந்தமாக இருந்துள்ளதும், சர்வே எண் 52/5A–ல் உள்ள நிலம் 1–ம் பிரதிவாதியின் தகப்பனாரின் மற்றொரு சகோதரரான பழினியப்பன் என்பவருக்கு சொந்தமாக இருந்துள்ளது ம.சா.ஆ.7–ஆன 'அ' பதிவேட்டின் மூலம் தெரியவருகின்றது.

15. 1–ம் எதிர்மனுதாரர் கிரயம் பெற்ற சொத்திற்கு செல்வதற்கு மெயின் ரோட்டிலிருந்து வடக்கு நோக்கி சர்வே எண்கள் 45/1B நிலத்தையும் 52/5C நிலத்தையும் 52/5A நிலத்தையும் கடந்து தான் செல்ல வேண்டும். எ.ம.சா.ஆ.1 ஆவணம் எழுதிய சமயத்தில், ம.சா.ஆ.7–ஆன 'அ' பதிவேட்டிலும் 45/1B, 52/5C நிலம் மட்டுமே 1–ம் மனுதாரரின் தகப்பனாருக்கு சொந்தமாக இருந்துள்ளது தெரிய வருகின்றது. சர்வே எண் 52/5A நிலம் 1–ம் மனுதாரரின் தகப்பனாரின்

சகோதரர் பழனியப்பன் என்பவருக்கு சொந்தமாக இருந்துள்ள காரணத்தால் எ.ம.சா.ஆ.2–ஆன பாதை ஒப்பந்தப்பத்திரத்தை 1–ம் மனுதாரரின் தகப்பனாருடன் அவரது இரண்டு சகோரர்களும் கூட்டாக எழுதிக்கொண்டுள்ளது தெரியவருகின்றது.

16. மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டதுபோல், சந்தேகத்திற்கிடமானதாக சொல்லப்படும் எ.ம.சா.ஆ 2 ஆவணத்தை விட்டுவிட்டு மனுதாரர்களுக்கு உள்ளதாக சொல்லப்படும் பாதைக்கான உரிமையை ஆய்வு செய்தாலுமே கூட, எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்தை 1–ம் மனுதாரும் அவரது பெற்றோரும் கிரயம் செய்தபோதே பொது ரோட்டிலிருந்து சர்வே எண் 52/5–ல் உள்ள 1–ம் மனுதாரரின் தகப்பனார் வேறு நிலம் வழியாக போக வர தட பாத்தியம் உள்ளது என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ள நிலையில், 1–ம் மனுதாரரின் தகப்பனாருக்கு சொந்தமான சர்வே எண் 45/1B நிலத்தையும் குறிப்பிட்டு தான் எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் அவ்வாறு எழுதிக்கொண்டுள்ள தெரியவருகின்றது. எனவே 1–ம் மனுதாரரும் அவரது பெற்றோர்களும் 1–ம் எதிர்மனுதாரரின் கிரயதாரருக்கு உலிபுரம் சர்வே எண் 529/3–ல் உள்ள சொத்தைக் கிரயம் செய்து கொடுத்தபோதே அச்சொத்துக்கு செல்லும் பாதை என சர்வே எண் 45/1B மற்றும் 52/5C நிலங்களின் வழியாக செல்வதற்கான உரிமையும் சேர்த்து எழுதிக்கொண்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

17. மேலும் எ.ம.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள கிரய சொத்துக்கு செல்லும் பாதையின் நீள, அகலம் குறிப்பிட்டு சொல்லப்படாத காரணத்தாலே 1–ம் மனுதாரரின் தகப்பனாரின் சகோதரர் பழனியப்பன் என்பவருக்கு சர்வே எண் 52/5A நிலம் சொந்தமாக இருந்த காரணத்தாலும், மேற்படி சர்வே எண் 52/5A நிலத்தையும் கடந்து தான் 1–ம் எதிர்மனுதாரரின் கிரயதாரர் கிரய சொத்துக்கு செல்ல வேண்டியிருந்துள்ளது என்று காரணத்தாலும்தான் தடத்தின் நீள, அகலம் குறிப்பிட்டு தெளிவாக எ.ம.சா.ஆ.2 பாதை பாத்திய ஒப்பந்தப்பத்திரம் எழுதிக்

கொள்ளப்பட்டிருப்பது தெரிய வருகின்றது. எ.ம.சா.ஆ.2 ஆவணத்தில் மொத்தம் நான்கு பேர் தரப்பினர்களாக உள்ளனர். அவ்வாறு உள்ள நிலையில் அதன் அசல் ஆவணம் நான்கு தரப்பினர்களில் யாரிடம் ஒருவரிடமாவது மட்டும் தான் இருக்க முடியும். மற்ற மூவர் அதன் சான்று நகலைத்தான் பயன்படுத்திக்கொள்ள முடியும். அந்த வகையில் அந்த ஆவணத்தின் அசல் ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்ற காரணத்திற்காக அதிலுள்ள உரிமையை மனுதாரர்கள் தற்போது மறுக்க இயலாது.

18. இம்மனுதாரர்கள் / வாதிகள் இவ்வழக்கை கடந்த 01.11.2021 அன்று தாக்கல் செய்துள்ளனர். அன்றைய தினமே மனுதாரர்கள் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரத்தை இந்நீதிமன்றம் வழங்கியிருந்தது. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ 1–ம் மனுதாரர் மற்றும் அவரது பெற்றோர்கள் எழுதிக்கொடுத்துள்ள எ.ம.சா.ஆ.1 ஆவணத்தை பற்றியோ, 1–ம் மனுதாரரின் தகப்பனார் மற்றும் தகப்பனாரின் சகோதரர்கள் எழுதிக்கொடுத்துள்ள எ.ம.சா.ஆ 1 பாதை ஒப்பந்தப்பத்திரம் குறித்தோ எதுவும் குறிப்பிடவில்லை. அவ்வாறான சூழ்நிலையில் மனு சொத்துக்களில் பாதை எதுவும் இருப்பதாக இந்நீதிமன்றத்தின் கவனத்திற்கு அறியப்படாத நிலையில் வழங்கப்பட்ட இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரத்தைக் கொண்டு, மனுதாரர்கள் மனு சொத்திலிருந்த பாதையை அழித்துவிட்டு அதை அவர்களது நிலங்களுடன் இணைத்துக்கொள்ள குழி வெட்டி புதியதாக கல்கம்பங்கள் நட்டு வேலி அமைத்துள்ளது எ.ம.சா.ஆ.11 முதல் 14 வரிசையிலுள்ள புகைபடங்கள், குறுந்தகடு மற்றும் ரசீதுகள் மூலம் தெரியவருகின்றது.

19. எ.ம.சா.ஆ.11–ல் உள்ள புகைபடம் 11.11.2021 அன்றும், எ.ம.சா.ஆ.12–ல் உள்ள புகைபடம் 14.11.2021 அன்றும் எடுக்கப்பட்டதற்கான ரசீதுகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதற்கும் முன்பே அதாவது 05.11.2021 அன்றே

எதிர்மனுதாரர்கள் கூறுவது மனு சொத்துக்களில் தார்ரோட்டிலிருந்து செல்லும் பாதை ஒன்று இருந்துள்ளது எ.ம.சா.ஆ.8 வரிசையில் உள்ள புகைபடங்கள் மற்றும் எ.ம.சா.ஆ.9 ரசீது மூலம் தெரியவருகின்றது. ஆக இம்மனு மற்றும் வழக்கு தாக்கல் செய்து எ.ம.சா.ஆ.8 வரிசையில் உள்ள புகைபடங்கள் எடுக்கப்பட்ட 05.11.2021 அன்று கூட எதிர்மனுதாரர்களுக்கு உரிமையுள்ள பாதை பூமியில் இருந்துள்ள நிலையில், இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரத்தை பெற்ற மனுதாரர்கள் அதை தவறாக பயன்படுத்தி பாதையை அழித்துவிட்டு குழி வெட்டி புதியதாக கல்கம்பம் அமைத்துள்ளது தெளிவாக தெரியவருகின்றது. அதை வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கையான நீ.ம.சா.ஆ.1–ம் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது தெரிய வருகின்றது.

20. வழக்கறிஞர் ஆணையர் மனு சொத்தினை கடந்த 18.11.2021 அன்று ஆய்வு செய்து தனது அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்துள்ளார். நீ.ம.சா.ஆ.2–ஆன வழக்கறிஞர் ஆணையரின் வரைபடத்தில், 'B' என குறிப்பிட்டுள்ள பகுதி தான் சர்வே எண் 45/1B மற்றும் 52/5C–ல் உள்ள நிலம் மற்றும் அந்த இடத்தில் மட்டும் சுமார் ஒரு மாத வயதுள்ள நெல் பயிரிடப்பட்டிருந்ததாகவும் கற்றறிந்த ஆணையர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். நீ.ம.சா.ஆ.2–ஆன வழக்கறிஞர் ஆணையரின் வரைபடத்தில் பாதை இருந்ததாக சொல்லப்படும் 'B' என்ற பகுதிக்கு மேற்கில் 'D' என்ற பகுதியில் குச்சிப் பயிர் பயிரிடப்பட்டிருப்பதும், அதேபோல் 'B' என்ற பகுதிக்கு கிழக்கில் 'E' என குறிப்பிட்டுள்ள பகுதியிலும் குச்சிப் பயிர் பயிரிடப்பட்டுள்ள நிலையில், பாதை இருந்த இடத்தில் மட்டும் மனுதாரர்கள் இம்மனு தாக்கல் செய்த பிறகு பாதையை அழித்துவிட்டு நெல் பயிர் பயிரிடப்பட்டுள்ளது வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கையின் மூலமாகவும் அவர் தரப்பில் தாக்கல் செய்துள்ள நீ.ம.சா.ஆ.4 வரிசையிலுள்ள புகைபடங்கள் மூலமாகவும் தெளிவாக தெரிய வருகின்றது.

.. 16 ...

21. நீ.ம.சா.ஆ.4 வரிசையிலுள்ள புகைபடங்களிலும் இரு பக்கமும் குச்சிப் பயிர் பயிரிடப்பட்டுள்ள நிலையில் பாதை இருந்ததாக சொல்லப்பட்ட இடத்தில் மட்டும் புதியதாக நெல் பயிர் பயிரிடப்பட்டுள்ளது தெளிவாக தெரியவருகின்றது. எனவே இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரத்தைப் பெற்ற மனுதாரர்கள் அதை தவறாக பயன்படுத்தி, எதிர்மனுதாரர்களுக்கு எ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையான ஆவணங்கள் மூலமாக உரிமையாக இருந்த பகுதியை அழித்துவிட்டு அதில் புதியதாக நெல் பயிர் பயிரிடப்பட்டுள்ளது தெளிவாக தெரியவருகின்றது. நீ.ம.சா.ஆ.2–ஆன வழக்கறிஞர் ஆணையரின் வரைபடத்தின் மூலம் 'B' என குறிப்பிடப்பட்டுள்ள பகுதிக்கும் வடக்கே பாதை இருப்பதாகவும், அதற்கும் வடக்கே எதிர்மனுதாரர்களின் வீடு மற்றும் நிலம் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தில் 'A' என குறிப்பிட்டுள்ள தார்சாலையிலிருந்து வடக்கே பிரிந்து 'B' என்ற பகுதியின் வழியாகவும், அதற்கும் வடக்கே 'C' என்ற பாதையின் வழியாகத்தான் எதிர்மனுதாரர்கள் இதுநாள் வரை சென்றுள்ளதும், 'B' என்று குறிப்பிட்டுள்ள இடத்திலிருந்த பாதையை மனுதாரர்கள் அழித்துவிட்டு அதில் நெல் பயிர் செய்து, 'B' என்று குறிப்பிட்டுள்ள பகுதியின் வடக்கில் கல்கம்பம் நடப்பட்டுள்ளது தெளிவாக தெரியவருகின்றது.

22. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மூலமாக எதிர்மனுதாரர்கள் தங்களுக்கு சொந்தமான உலிபுரம் கிராம சர்வே எண் 529/3–ல் உள்ள நிலத்திற்கு செல்வதற்கு, நீ.ம.சா.ஆ.2–ஆன வழக்கறிஞர் ஆணையரின் வரைபடத்தில் 'A' என குறிப்பிட்டுள்ள தார்சாலையிலிருந்து வடக்கு நோக்கி 'B' என குறிப்பிட்டுள்ள சர்வே எண் 45/1B மற்றும் 52/5C நிலத்தின் வழியாகவும், அதற்கும் வடக்கே உள்ள 52/3 நிலத்தின் வழியாகவும் செல்வதற்கு பாதை உரிமை உள்ள நிலையில், அந்தப் பாதையை மனுதாரர்கள் அழித்துவிட்டு அதை விவசாய நிலமாக மாற்ற உரிமையில்லை. மேலும் எ.ம.சா.ஆ.2–ஆன பாதை பாத்திய ஒப்பந்தப்பத்திரம் குறிப்பிட்டுள்ள பாதையை அதன் தரப்பினர்கள் யாரும் எவ்வகையிலும் அழிக்கக்கூடாது என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

.. 17 ...

23. எ.ம.சா.ஆ.2 ஆவணத்தின் ஒரு தரப்பினரான செல்லப்ப கவுண்டர் என்பவர் 1–ம் மனுதாரரின் தகப்பனாராக உள்ள நிலையிலும், அவரிடமிருந்து 1–ம் மனுதாரர் பாதை இருந்த சொத்துக்களை அடையப்பெற்றுள்ள நிலையிலும், அப்பாதையில் உள்ள உரிமை எதையும் 1–ம் மனுதாரர் மறுக்க இயலாது. எனவே எதிர்மனுதாரர்கள், எ.ம.சா.ஆ.1 முதல் 3 வரை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையை அவர்களது நிலங்களுக்கு செல்ல பயன்படுத்தி வருவதை தடை செய்ய மனுதாரர்களுக்கு எந்தவித உரிமையும் இல்லை. அந்த அடிப்படையில், இம்மனு சொத்துக்களில், எ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையான ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள பாதை போக மீதமுள்ள சொத்துக்களை மனுதாரர்கள் அனுபவித்து வருவதற்கு எதிர்மனுதாரர்கள் எந்தவித இடைஞ்சலும் தடங்கலும் செய்யக்கூடாது என்று இவ்வழக்கு முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கி உத்தரவிடப்படுகின்றது.

24. மேலும் மனு சொத்துக்களின் சர்வே எண் 45/1B மற்றும் 52/5C நிலங்களில் எ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையான ஆவணங்களில் கண்டவாறு இருந்த பாதையை இவ்வழக்கிற்கு பின்னிட்டு மனுதாரர்கள் அழித்துவிட்டுள்ளது தெளிவாக தெரியவருவதாலும், வழக்கறிஞர் ஆணையர் மனு சொத்தை பார்வையிட்ட 18.12.2021 தேதியில் பாதை இருந்த இடத்தில் ஒரு மாத வயதுடைய நெல் பயிர் பயிரிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதாலும், அந்நெல் பயிர் அறுவடை செய்யப்பட்டிருப்பின் இன்றிலிருந்து இரண்டு வார காலத்திற்குள் மனுதாரர்கள் ஏற்கனவே அழித்துவிட்ட பாதையை மீண்டும் அதன் பழைய நிலைக்கே கொண்டு வர வேண்டுமென்றும், அவர்கள் நிலத்தின் வடபுறம் பாதையை மறித்து அமைத்திருந்த கல்கட்டு மற்றும் வேலியையும் அப்புறப்படுத்த வேண்டுமென்றும், அவ்வாறு செய்ய தவறினால் அதை எதிர்மனுதாரர்கள் அவர்களது சொந்த செலவில் செய்து கொண்டு அத்தொகையை மனுதாரர்களிடம் வசூலித்துக்கொள்ளலாம் என்றும் உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு

உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து உத்தரவிடப்படுகின்றது.

25. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள பதிலுரையுடன், எதிரிடை கோருரிமையாக (Counter Claim), எ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையான ஆவணங்களின் அடிப்படையில் பிரச்சினைக்குரிய பாதையில் பிரதிவாதிகளுக்குண்டான உரிமையை விளம்புகை செய்யுமாறும், அதன் தொடர்ச்சியாக, அப்பாதையை பிரதிவாதிகள் பயன்படுத்துவதற்கு வாதிகள் எவ்வித இடைஞ்சல், தடங்கலும் செய்யக்கூடாது என்றும், மனுதாரர்கள் / வாதிகளால் அழித்துவிட்ட பாதையை மீண்டும் அதன் பழைய நிலைக்கே கொண்டு வர வேண்டும் என்றும் பரிகாரம் கேட்டு, அதற்கான நீதிமன்ற கட்டணமும் செலுத்தியுள்ள நிலையில், மனுதாரர்கள் / வாதிகளால் அழித்துள்ள பாதையை மீண்டும் அதன் பழைய நிலைக்கே கொண்டு வரவேண்டும் என்றவாறான உத்தரவையும் இம்மனுவின் உத்தரவிலேயே வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்ததன் அடிப்படையிலேயே அப்பரிகாரம் வழங்கப்படுகின்றது. மனுவின் தன்மையைக் கருதி செலவுத் தொகை இல்லை.

இறுதியாக இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது பகுதியாக அனுமதிக்கப்படுகின்றது. முடிவில், இம்மனு சொத்துக்களில், எ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையான ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள பாதை போக மீதமுள்ள சொத்துக்களை மனுதாரர்கள் அனுபவித்து வருவதற்கு எதிர்மனுதாரர்கள் எந்தவித இடைஞ்சலும் தடங்கலும் செய்யக்கூடாது என்று இவ்வழக்கு முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கி உத்தரவிடப்படுகின்றது. மேலும் மனு சொத்துக்களின் சர்வே எண் 45/1B மற்றும் 52/5C நிலங்களில் எ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையான

ஆவணங்களில் கண்டவாறு இருந்த பாதையை இவ்வழக்கிற்கு பின்னிட்டு மனுதாரர்கள் அழித்துவிட்டுள்ளது தெளிவாக தெரியவருவதாலும், வழக்கறிஞர் ஆணையர் மனு சொத்தை பார்வையிட்ட 18.12.2021 தேதியில் பாதை இருந்த இடத்தில் ஒரு மாத வயதுடைய நெல் பயிர் பயிரிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதாலும், அந்நெல் பயிர் அறுவடை செய்யப்பட்டிருப்பின் இன்றிலிருந்து இரண்டு வார காலத்திற்குள் மனுதாரர்கள் ஏற்கனவே அழித்துவிட்ட பாதையை மீண்டும் அதன் பழைய நிலைக்கே கொண்டு வர வேண்டுமென்றும், அவர்கள் நிலத்தின் வடபுறம் பாதையை மறித்து புதியதாக அமைத்திருந்த கல்கட்டு மற்றும் வேலியையும் அப்புறப்படுத்த வேண்டுமென்றும், அவ்வாறு செய்ய தவறினால் அதை எதிர்மனுதாரர்கள் அவர்களது சொந்த செலவில் செய்துக்கொண்டு அத்தொகையை மனுதாரர்களிடம் வசூலித்துக் கொள்ளலாம் என்றும் உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து உத்தரவிடப்படுகின்றது. மனுவின் தன்மையைக் கருதி செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2022–ஆம் ஆண்டு, ஜுன் திங்கள், 20–ஆம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G YUVARAJ

Digitally signed by G YUVARAJ
Date: 2022.06.20 14:06:35 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**<u>மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சாட்சிகள்</u> :** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u>** இல்லை

**மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | 19.11.1992 தேதியிட்ட கிரயப்பத்திரத்தின் அசல் |
| ம.சா.ஆ.2 | 21.04.2004 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் |
| ம.சா.ஆ.3 | 02.02.2021 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் |
| ம.சா.ஆ.4 | பட்டா எண் 313–க்கான கணினி பட்டா |
| ம.சா.ஆ.5 | பட்டா எண் 2834–க்கான கணினி பட்டா |
| ம.சா.ஆ.6 | பசலி எண் 1431–க்கான அடங்கல் பதிவேட்டின் உண்மை நகல் |
| ம.சா.ஆ.7 | 'அ' பதிவேட்டின் உண்மை நகல் |
| ம.சா.ஆ.8 | சர்வே எண் 45–க்கான புல வரைபடத்தின் உண்மை நகல் |
| ம.சா.ஆ.9 | சர்வே எண் 52–க்கான புல வரைபடத்தின் உண்மை நகல் |
| ம.சா.ஆ.10 | பட்டா எண் 472–க்கான கணினி பட்டா |
| ம.சா.ஆ.11 | பட்டா எண் 913–க்கான பழைய பட்டா பாஸ்புத்தகத்தின் அசல். |
| ம.சா.ஆ.12 | பட்டா எண் 313–க்கான யூ.டி.ஆர் பட்டா அசல் |
| ம.சா.ஆ.13 | பட்டா எண் 1058–க்கான யூ.டி.ஆர் பட்டா அசல் |
| ம.சா.ஆ.14 | தாவா மாதிரி வரைபடம் |

**எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :**

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 31.08.1984 தேதியிட்ட கிரயப்பத்திரத்தின் அசல் |
| எ.ம.சா.ஆ.2 | 04.09.1984 தேதியிட்ட தடபாத்திய ஒப்பந்தப்பத்திரத்தின் சான்று நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 05.05.2005 தேதியிட்ட கிரயப்பத்திரத்தின் அசல் |
| எ.ம.சா.ஆ.4 | தம்மம்பட்டி கிராம சர்வே எண் 52–க்கான கணிணி புல வரைபடம் |
| எ.ம.சா.ஆ.5 | தம்மம்பட்டி கிராம சர்வே எண் 45–க்கான கணிணி புல வரைபடம் |
| எ.ம.சா.ஆ.6 | உலிபுராம் கிராம சர்வே எண் 529–க்கான கணிணி புல வரைபடம் |
| எ.ம.சா.ஆ.7 | மாதிரி வரைபடம் |
| எ.ம.சா.ஆ.8 | புகைபடம் (11 எண்ணிக்கை) மற்றும் குறுந்தகடு |
| எ.ம.சா.ஆ.9 | 05.11.2021 தேதியிட்ட ரசீது அசல் |

.. 21 ...

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ.10 | 1–ம் எதிர்மனுதாரர் அவரது வழக்கறிஞர் மூலம், 1–ம் மனுதாரர் மற்றும் அவரது தகப்பனாருக்கு கடந்த 01.11.2014 அன்று அனுப்பிய பதில் அறிவிப்பு |
| எ.ம.சா.ஆ.11 | புகைபடம் (5 எண்ணிக்கை) மற்றும் 11.11.2021 தேதியிட்ட ரசீது |
| எ.ம.சா.ஆ.12 | புகைபடம் (7 எண்ணிக்கை) |
| எ.ம.சா.ஆ.13 | குறுந்தகடு |
| எ.ம.சா.ஆ.14 | 14.11.2021 தேதியிட்ட ரசீது அசல் |
| எ.ம.சா.ஆ.15 | 12.02.2021 அன்று 1–ம் பிரதிவாதி, 1–ம் வாதிக்கு எதிராக மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் உயரதிகாரிகளுக்கு அனுப்பிய புகார் மனுவின் நகல். |
| எ.ம.சா.ஆ.16 | 13.02.2021 தேதியிட்ட காவல் கண்காணிப்பாளரின் அஞ்சல் ஒப்புகை அட்டை |
| எ.ம.சா.ஆ.17 | 15.02.2021 தேதியிட்ட மாவட்ட ஆட்சியரின் அஞ்சல் ஒப்புகை அட்டை |
| எ.ம.சா.ஆ.18 | 15.02.2021 தேதியிட்ட வருவாய் கோட்டாட்சியரின் அஞ்சல் ஒப்புகை அட்டை |
| எ.ம.சா.ஆ.19 | 15.02.2021 தேதியிட்ட கெங்கவல்லி வட்டாட்சியரின் அஞ்சல் ஒப்புகை அட்டை |
| எ.ம.சா.ஆ.20 | 21.10.2021 தேதியன்று ஆத்தூர் வருவாய் கோட்டாட்சியர், ஆத்தூர் காவல் துணை கண்காணிப்பாளருக்கு அனுப்பிய கடிதம் |
| எ.ம.சா.ஆ.21 | 23.04.2021 அன்று சேலம் மாவட்ட ஆட்சியர், ஆத்தூர் வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பிய கடிதம் |

**<u>நீதிமன்ற சாட்சிகள் </u>:** இல்லை

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள் </u>:**

| | |
|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கை |
| நீ.ம.சா.ஆ.2 | வழக்கறிஞர் ஆணையரின் மாதிரி வரைபடம் |

| | |
|---|---|
| நீ.ம.சா.ஆ.3 | நில அளவையர் வழங்கிய புல எண்கள் 45 மற்றும் 52–ன் கூட்டு வரைபடம் |
| நீ.ம.சா.ஆ.4 | புகைபடம் (16 எண்ணிக்கை) மற்றும் குறுந்தகடு |

G YUVARAJ Digitally signed by G YUVARAJ Date: 2022.06.20 14:06:45 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

<u>மு.மா.உ.நீ., ஆத்தூர்.</u>

**இ.ம.வ. எண் 2/2021**

---------------

**அ.வ. எண் 213/2021**

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 20.06.2022.

தேதியில் பாதை இருந்த இடத்தில் ஒரு மாத வயதுடைய நெல் பயிர் பயிரிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டு உள்ளதாலும், அந்நெல் பயிர் அறுவடை செய்யப்பட்டிருப்பின் இன்றிலிருந்து இரண்டு வார காலத்திற்குள் மனுதாரர்கள் ஏற்கனவே அழித்துவிட்ட பாதையை மீண்டும் அதன் பழைய நிலைக்கே கொண்டு வர வேண்டுமென்றும், அவர்கள் நிலத்தின் வடபுறம் பாதையை மறித்து புதியதாக அமைத்திருந்த கல்கட்டு மற்றும் வேலியையும் அப்புறப்படுத்த வேண்டுமென்றும், அவ்வாறு செய்ய தவறினால் அதை எதிர்மனுதாரர்கள் அவர்களது சொந்த செலவில் செய்துக்கொண்டு அத்தொகையை மனுதாரர்களிடம் வசூலித்துக் கொள்ளலாம் என்றும் உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து உத்தரவிடப்படுகின்றது. மனுவின் தன்மையைக் கருதி செலவுத் தொகை இல்லை.

G YUVARAJ

Digitally signed by G YUVARAJ
Date: 2022.06.20 14:07:02 +0530

**மு.மா.உ.நீ.**

**I.A. No. 2 of 2021**

**in**

**O.S. No. 213 of 2021**

**நாள் : 06.06.2022** உத்தரவு பகரப்பட்டது. இறுதியாக இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு–வானது பகுதியாக அனுமதிக்கப்படு–கின்றது. முடிவில், இம்மனு சொத்துக்களில், எ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையான ஆவணங்களில் சொல்லப்–பட்டுள்ள பாதை போக மீதமுள்ள சொத்துக்களை மனுதாரர்கள் / வாதிகள் அனுபவித்து வருவதற்கு எதிர்மனு–தாரர்கள் / பிரதிவாதிகள் எந்தவித இடைஞ்சல், தடங்கலும் செய்யக்கூடாது என்று இவ்வழக்கு முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கி உத்தரவிடப்படுகின்றது. மேலும் மனு சொத்துக்களின் சர்வே எண் 45/1B மற்றும் 52/5C நிலங்களில் எ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையான ஆவணங்களில் கண்டவாறு இருந்த பாதையை இவ்வழக்கிற்கு பின்னிட்டு மனுதாரர்கள் அழித்துவிட்டுள்ளது தெளிவாக தெரிய வருவதாலும், வழக்கறிஞர் ஆணையர் மனு சொத்தை பார்வையிட்ட 18.12.2021

*.. 2 ...*